**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only



**மலங்கரை கத்தோலிக்க இளைஞர் தினம்**
**அக்டோபர் 6**

Printed Matter





To

BOOK POST

If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**


Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# WORLD MISSION SUNDAY
**அக்டோபர் 20**
**மறைபரப்பு ஞாயிறு**

**GO AND INVITE EVERYONE** *to the banquet*

# Bulletin
## Diocese of Marthandam
**மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்**




**செபமாலைத் திருநாள்**
**அக்டோபர் 08**


மலர் 21 | அக்டோபர் 2024 | இதழ் 10

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 02.10.2024 | Wednesday | 4.00 pm | United Christian Council - Rally and Meeting | Pilankalai |
| 05.10.2024 | Saturday | 11.00 am | Feast Day | DM Convent, Mtm |
| 06.10.2024 | Sunday | 3.00 pm | Year of the Word of God Inauguration - Kollemcode District | Punnamoottukadai |
| | | 5.00 pm | Feast Mass | Pushpagiri |
| 7.10.2024 | Monday | 5.00 pm | Memorial Mass | Attachakkal |
| 11.10.2024 | Friday | 10.00 am | Laying Foundation Stone for Presbytery | Virudhunagar |
| | | 5.00 pm | Convention | Trichy Retreat Centre |
| 12.10.2024 | Saturday | | Convention | Trichy Retreat Centre |
| 13.10.2024 | Sunday | | Convention | Trichy Retreat Centre |
| 17.10.2024 | Thursday | | Baptism | Soosaipuram |
| 20.10.2024 | Sunday | 3.00 pm | Church Blessing | Nallanathapuram |
| 22.10.2024 | Tuesday | 9.30 am | Presbyteral Council | Bishop's House |
| 24.10.2024 | Thursday | 10.00 am | Schoolday | MJK Marthandam |
| 25.10.2024 | Friday | 5.30 pm | Feast Mass | Adichavilagam |
| 27.10.2024 | Sunday | 9.00 am | Feast Mass | Kolkata |
| 28.10.2024 | Monday | 9.00 am | Class | Major Seminary |
| 29.10.2024 | Tuesday | 9.00 am | Class | Major Seminary |
| 30.10.2024 | Wednesday | 9.00 am | Class | Major Seminary |
| 31.10.2024 | Thursday | 9.00 am | Installation Ceremony | Changanassery |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 21 அக்டோபர் 2024 இதழ். 10


***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*



மலர். 21 செப்டம்பர் 2024 இதழ். 9


Address :

Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail : mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam




மலர். 21 அக்டோபர் 2024 இதழ் 10

## முக்கியமான நாட்கள்
அக்டோபர் 2024

| | |
|---|---|
| 01 | சர்வதேச முதியோர் தினம் |
| 01 | சர்வதேச இசை தினம் |
| 02 | காந்தி ஜெயந்தி |
| 02 | சர்வதேச அகிம்சை தினம் |
| 04 | உலக விலங்குகள் நல தினம் |
| 04 | உலக விண்வெளி வாரம் |
| 05 | உலக ஆசிரியர் தினம் |
| 06 | உலக புன்னகை தினம் |
| 09 | உலக அஞ்சல் தினம் |
| 10 | உலக மனநல தினம் |
| 11 | சர்வதேச பெண் குழந்தைகள் தினம் |
| 12 | உலக பார்வை தினம் |
| 15 | உலக மாணவர் தினம் |
| 16 | உலக உணவு தினம் |
| 17 | சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் |
| 20 | தேசிய ஒற்றுமை தினம் |
| 24 | ஐக்கிய நாடுகள் தினம் |
| 24 | உலக போலியோ தினம் |
| 30 | உலக சேமிப்பு தினம் 2024 |

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | Circulars | 3-13 |
| 2. | 94-ஆம் மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமமும் | 14 |
| 3. | பேராலய தலைமை வாயில் நிலை அர்ச்சித்து நிறுவுதல் திருச்சடங்கு | 15 |
| 4. | விவிலிய பணிக்குழு | 15 |
| 5. | நற்செய்தி சங்கம் | 16 |
| 6. | குருமடச் செய்திகள் | 17 |
| 7. | இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா | 18 |
| 8. | Office Change | 18 |
| 9. | Change of Address | 18 |
| 10. | மேரி மக்கள் துறவற சபை | 19 |
| 11. | MIDS | 20 |
| 12. | திருமண ஆயத்தப்பயிற்சி | 22 |
| 13. | மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம் (MCCL) | 23 |
| 14. | Health for One Million (HOM) | 24 |
| 13. | மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி | 25 |
| 15. | மறைவட்ட செய்திகள் | 26 |
| 16. | பெயர்விழா நல்வாழ்த்துக்கள் | 27 |
| 17. | ஆயரின் செப்டம்பர் மாத நிகழ்வுகள் | 28 |
| 18. | இம்மாதம் நினைவு கூர | 31 |
| 19. | Bishop's Diary | 32 |


*Printed by*
**Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852**



இறைஅருளாலும்
திருஆட்சிப்பீடத்தின் இசைவாலும்
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின்
**உயர் பேராயர் - காதோலிக்கோஸ்**
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
பாவாவிடமிருந்து
நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட
ஆயர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள்,
ரம்பான்மார்கள், குருக்கள், திருத்தொண்டர்கள்,
துறவிகள் மற்றும் இறைமக்கள் ஆகிய
அனைவருக்கும் ஆசிகள்.

Prot. No. CPL 3/2024

தாமாய்த் தோன்றியவரும் ஆதிமுடிவற்றவரும், உள்ளியல்பில் சரிநிகர் ஆனவருமாய் இருக்கிற மூவோர் இறைவனுக்குப் புகழ்

**94-ஆம் மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும்**
**சபை சங்கமமும்**

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,*

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் 94-ம் மறுஒன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமமும் 2024 செப்டம்பர் திங்கள் 20, 21 தேதிகளில் கொண்டாடப்படுகிறது. கடந்த 94 ஆண்டுகளாக மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை வாயிலாக கருணைவடிவாம் கடவுளை ஆராதனை செய்யவும் ஆசீர் பல பெறவும் நமக்கு இயன்றது. 2030 செப்டம்பர் 20-ஆம் நாள் நாம் கொண்டாடும் மறுஒன்றிப்பு நூற்றாண்டு விழாவுக்கு ஆயத்தம் செய்யும் 7 ஆண்டு காலகட்டத்திற்குள் நாம் நுழைகிறோம்.

இத்தருணத்தில் நாம் கொண்டாடும் மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமமும் சிறந்த முக்கியத்துவம் பெறுகிறது. செப்டம்பர் 20, 21 தேதிகளில் நடைபெறும் நிகழ்வுகளை பாறசாலை மறைமாவட்டம் பொறுப்பேற்று நடத்துகிறது. திருச்சபையாக இணைந்து இறைவனுக்கு நன்றி சொல்லவும் திருச்சபையின் திருப்பணிகளை புது எழுச்சியுடன் தொடரவும் இவ்விழா காரணமாகட்டும்.

''மரணத்திற்குப்பின் விண்ணகத்தை அடைந்ததும் கத்தோலிக்கரல்லாத என் சகோதரர்களின் மறுஒன்றிப்புக்காக இறைவனின் திருமுன் இடைவிடாமல் இறை வேண்டல் செய்வேன்" என்று கூறி இறையடி சேர்ந்த பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகை ''வணக்கத்திற்குரியவர்'' என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டபின் வரும் முதல் சபை சங்கமம் இது. சபை மக்களின் இடைவிடாத வேண்டுதலுக்கு விண்ணகம் தந்த பதில் மொழியே இது. இறை அருளிலும் இறை வேண்டலிலும் அடைக்கலம் தேடி வாழ்ந்த அவர், ஒன்றிப்பின் தூதுவர்களாக வாழ நம்மை அழைக்கிறார். அகில உலக திருஅவையில் நமது திருச்சபை ஒன்றிப்பின் இறைவாக்குரைக்கும் கடமையை பெற்றுள்ளது. எதிர் சாட்சியங்களும், பிரிவினைகளும் பிளவுகளும் பெருகிவரும் இக்காலத்தில் ஒன்றிப்பு ஒற்றுமை இவற்றில் பாலமாக மாற கடவுள் நம்மை பணித்துள்ளார் என்பதை உணர்வோம்.

கடந்த 94 ஆண்டுகள் ஆசீர்வாதத்தின் காலமாக கடந்து சென்றுள்ளன. கடவுளின் பராமரிப்பும் வழி நடத்துதலும் என்றும் திருச்சபைக்கு அனுபவமாகியது. கடவுளின் கைகளில் சிறந்த கருவிகளாக செயல்பட்ட ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலை ஊழியர்கள் ஆகியோரின் இறைவேண்டல் தியாகம் கலந்த அர்ப்பணம் இவற்றின் விளைவே இன்றைய திருச்சபை. அனைவரையும் ஆண்டவரின் திருமுன் நினைவுகூர்ந்து நன்றி கூறுகிறேன்.



**மறுஒன்றிப்பு நூற்றாண்டு விழாவுக்கான ஆயத்தம்**

மலங்கரை கத்தோலிக்க திருச்சபை மறுஒன்றிப்பின் நூற்றாண்டு விழா கொண்டாட ஆயத்தமாகி வருகிறது. கடந்து வரும் காலயளவில் திருச்சபையின் திருப்பணிகளை ஊக்குவிக்க உத்வேகம் பெறும் காலம் இது. இதற்காக பல செயல் திட்டங்கள் வகுத்துள்ளோம். திருச்சபை தன்னை புதிதாக்கம் செய்து, சமூகத்தில் கிறிஸ்துவுக்கு சான்று பகரும் சபையாக உருவாக்கம் பெறும் இலக்கை இச்செயல்திட்டங்கள் நோக்கமாக கொண்டுள்ளன. சுருங்ககூறின், அடுத்து வரும் 7 ஆண்டுகளை திருச்சபையின் புதிதாக்கம், ஆற்றல்படுத்துதல் என்ற இரு நோக்கங்களுக்காக அர்ப்பணம் செய்கிறோம். தூய பவுலின் சொற்கள் இதற்கு நம்மை தூண்டுகின்றன. "தகுந்த வேளையில் நான் உமக்கு பதிலளித்தேன்; விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்" எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்! (2 கொரி 6:20). 2024 செப்டம்பர் 20 முதல் 2030 செப்டம்பர் 20 வரை உள்ள காலகட்டத்தை தகுந்த காலமாகவும் மீட்பின் நாட்களாகவும் மாற்ற நமது திருச்சபையை கடவுளின் திருமுன் மறுசமர்ப்பணம் செய்வோம். இதனால் புது உணர்வும் புது அருட்பொழிவும் பெற நமக்கு இயலட்டும்.

''கிறிஸ்துவில் அனைத்தையும் புதிதாக்கம் செய்வோம்'' *(To renew all things in Christ).* திருத்தந்தை 10-ம் பத்திநாதர் தனது திருப்பணிக்கு அடித்தளமாக எடுத்துக்கொண்ட இந்த விருதுவாக்கு இங்கே குறிப்பிடத்தக்கது. திருச்சபையை வழிநடத்த இந்த விருதுவாக்கு அவருக்கு உதவியது. அடுத்து வரும் ஆண்டுகளில் தனிநபர் வாழ்வையும் திருஅவை வாழ்வையும் கிறிஸ்துவில் புதிதாக்கம் செய்வோம். 2024 செப்டம்பர் 20 முதல் 2025 செப்டம்பர் 19 வரை வரும் புதிதாக்கத்தின் முதற்கட்டம் இவ்வாண்டு மறுஒன்றிப்பு ஆண்டு விழா நகரில் வைத்து தொடங்கி வைக்கப்படும். "என் வார்த்தையை வாழ்வாக்குங்கள்'' (யோவான் 8:31) என்ற

விருதுவாக்கில் வேரூன்றி இறைவார்த்தை ஆண்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இறைவார்த்தை ஆண்டு நமது திருச்சபையில் இறை அனுபவம் தரும் ஆண்டாக மாற வேண்டும். இதற்காக மேற்கொள்ளும் முயற்சியில் அனைவரும் முழுமனதுடன் பங்கேற்க அன்புடன் அழைப்பு விடுக்கிறேன்.

**94-ஆம் மறுஒன்றிப்பு ஆண்டுவிழா : பாறசாலை**

இந்த ஆண்டய நமது மறுஒன்றிப்பு மற்றும் சபை சங்கம விழாக்களை பாறசாலை மறைமாவட்டம் பொறுப்பேற்று நடத்துகிறது. இம்மறைமாவட்டம் நமது மறைத்தூதுப்பணியின் சிறந்த சான்றாக விளங்குகிறது. 2017-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இம்மறைமாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை நினைத்து இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். மறுஒன்றிப்பு மற்றும் சபை சங்கம விழாக்களை பொறுப்பேற்று நடத்தும் மேதகு ஆயர் தோமஸ் மார் எவுசேபியோஸ், குருக்கள், இருபால் துறவியர், இறைமக்கள் யாவரையும் மனதார வாழ்த்துகிறேன்; அவர்களுக்காக இறைவேண்டலும் செய்கிறேன். ஆடம்பர கூட்டுத்திருப்பலி, நற்கருணை ஆராதனை, நற்செய்தி உரை, இயக்கங்களின் கூடுகைகள் யாவற்றிலும் அனைவரும் பங்கேற்க அறிவுறுத்துகிறேன். வழக்கத்திற்கு மாறாக நடைபெறும் நிகழ்வுகளை நினைவூட்ட விரும்புகிறேன். செப்டம்பர் 20-ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நற்செய்தி பெருவிழாவும், நற்கருணை ஆராதனையும் நடைபெறும். 21-ம் தேதி காலை 7.45 மணிக்கு கொடி உயர்த்துதலும், 8.00 மணி முதல் 10.00 மணி வரை கூடுகைகளும் தொடர்ந்து 10.30-க்கு கூட்டுத்திருப்பலியும், இறுதிச்செய்தி வழங்கலும் நடைபெறும். அன்பின் விருந்துடன் அனைத்தும் நிறைவுபெறும்.

அனைத்து மறைமாவட்டங்களிலிருந்தும், மறைத்தூது பணித்தளங்களிலிருந்தும், துறவோர் இல்லங்களிலிருந்தும் ஏராளமானோர் 2024 செப்டம்பர் 21-ம் நாள் வெங்னானூர் மலங்கரை



*VPSHS* பள்ளிக்கூட வளாகத்தில் (மார் இவானியோஸ் நகர்) வைத்து நடைபெறும் மறுஒன்றிப்பு ஆண்டு விழா கொண்டாட்டங்களில் பங்கேற்று ஆசீர்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். அன்று திருப்பலியில் சேகரிக்கப்படும் காணிக்கை பாறசாலை மறைமாவட்ட அன்பிரக்கப் பணிகளுக்காக வழங்கப்படும். எனவே, இத்திருப்பலியில் பங்கேற்கும் ஆராதனை சமூகம் அதற்கு ஆயத்தமாக வரும்படி நினைவுபடுத்துகிறேன். அடுத்து வரும் ஆண்டுகளிலும் இந்த அரும்பணியை தொடர்வோம்.

மறுஒன்றிப்பு விழா செலவுகளுக்காக மறைமாவட்டங்கள், துறவற சமூகங்கள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனிநபர் என தங்களால் இயன்ற நன்கொடைகள் வழங்கி தொடக்க நிலையிலுள்ள பாறசாலை மறைமாவட்டத்திற்கு உதவ வேண்டுமென்று அறிவுறுத்துகிறேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக. இறை அன்னையாகிய தூய கன்னி மரியாவினுடையவும், திருத்தூதர்களினுடையவும், குறிப்பாக, நம் தந்தையாகிய மார் தோமா சீடருடையவும் வேண்டுதல்களால் இது அமைவதாக. ஆமென்.

*இவண்,*
ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்,

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத்
திருஅவையின் உயர் பேராயர் - காதோலிக்கோஸ்

23-08-2024
காதோலிகேட்மையம்,
பட்டம், திருவனந்தபுரம்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை

# இறைவார்த்தை ஆண்டு

2024 செப்டம்பர் 20 முதல் 2025 செப்டம்பர் 19 வரை

**மறையுரை குறிப்புகள்**

(செப்டம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை, இறைவார்த்தை ஆண்டு தொடக்க விழாவில் நடத்த வேண்டிய மறையுரை).

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை நூற்றாண்டு விழாவுக்கு ஆயத்தமாக இறைவார்த்தை ஆண்டை கடைபிடிப்பது யாவரும் அறிந்ததே. அதற்கான கையேடு, செயல்திட்டங்கள் உங்களுக்கு கிடைத்திருக்கும் என நம்புகிறேன். அதன் தொடர்ச்சியாக செப்டம்பர் மாதம் 29-ம் நாள் நடைபெற இருக்கும் தொடக்க விழா அன்று குருக்கள் நடத்த வேண்டிய மறையுரையில் குறிப்பிட வேண்டிய சில சிந்தனைகளை பகிர்ந்து கொள்கிறேன்.

1. உரோமை பேரரசின் ஒரு மாநிலமாக இருந்த தென்னாப்பிரிக்காவில் உள்ள துனிஷியாவில் அபித்தீன் என்று ஒரு இடம் இருந்தது. பேரரசர் டொமிஷியன் காலத்தில் அதாவது கி.பி 303-இல் நடந்த ஒரு நிகழ்வு திருச்சபை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பேரரசர் மூன்று ஆணைகளை அறிவித்திருந்தார். அதை மீறுபவர்களுக்கு மரண தண்டனையும் விதித்திருந்தார்.

1. வழிபாட்டு தலங்கள் கட்டுவது தடை செய்யப்பட்டது
2. மறைநூல் வைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டது
3. திருப்பலி ஒப்புக்கொடுப்பது குற்றமாக கருதப்பட்டது

ஞாயிற்றுகிழமை அன்று திருப்பலிக்கு பின் வெளியே வந்த 49 கிறிஸ்தவர்களை உரோமை படையாளிகள் கைது செய்து ஆளுநரின் முன் கொண்டு வந்தனர். பேரரசரின் ஆணையை மீறி எதற்கு ஞாயிற்றுகிழமை ஒன்று கூடினீர்கள் என ஆளுநர் வினவ



அவர்களின் தலைவராக இருந்த ஒக்டோவியஸ் பெலிக்ஸ் “ஞாயிற்றுகிழமை இன்றி எங்களால் வாழ முடியாது (We cannot live without Sunday) என்று பதிலளித்தார். ஞாயிற்றுகிழமை என்ற சொல் மூன்று காரியங்களை தன்னுள் கொண்டுள்ளது. தோழமை உணர்வு, நற்செய்தி அறிவித்தல், அப்பம் பிட்குதல்.

நீங்கள் மறைநூலை பராமரிப்பது உண்டா? மீண்டும் கேள்வி எழுப்பிய ஆளுநருக்கு “ஆம் நாங்கள் மறைநூலை இதயத்தில் பாதுகாக்கிறோம்” என்றார் பெலிக்ஸ். 49 கிறிஸ்தவர்களையும் கொலை செய்ய ஆணையிட்டார் ஆளுநர். அவர்களை ‘அபித்தீனின் இரத்தசாட்சிகள்’ என்று திருச்சபை போற்றுகிறது.

**2. இறைவார்த்தையை இதயத்தில் பாதுகாப்பவன் கிறிஸ்தவன்**

இறைவார்த்தையை இதயத்தில் பாதுகாப்பவன் கிறிஸ்தவன். அவனுடைய அடையாளமும் இதுவே. முதல் கிறிஸ்தவராகிய அன்னை மரியா ‘இறைவார்த்தையை இதயத்தில் இருத்தி சிந்தித்தவள்’ (லூக் 2:19-2:51). “யோசேப்பு கண்ட கனவின் பொருட்டு அவர் சகோதரர்கள் அவர் மீது பொறாமை கொண்டனர். அவர் தந்தையோ”, ‘இக்காரியத்தை தன் மனத்தில் கொண்டார்’ (தொநூ 37:11). கிறிஸ்தவன் யார்? என்ற கேள்விக்கு; கிறிஸ்து உள்ளத்தில் உள்ளவன் என்ற வரையறை மிகவும் உகந்தது. எவரிடம் கிறிஸ்து வாழ்கிறாரோ அவரே கிறிஸ்தவர். கிறிஸ்தவம் என்பது இயேசு கிறிஸ்து என்ற நபருடனான சந்திப்பு. ‘என் வார்த்தையில் நிலைத்திருங்கள் என்னும் இலக்கு வாக்கு இறைவார்த்தை ஆண்டுக்கு மிக உகந்ததே. “என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைபிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்'' (யோவா 8:31). இச்சிந்தனை யோவான் நற்செய்தி 15-ம் அதிகாரத்தில் கூடுதல் அழுத்தம் பெறுகிறது. “என்னோடு இணைந்திருங்கள்” (யோவா 15:4), “என் வார்த்தையில் நிலைத்திருங்கள்” (யோவா 15:7), “என் அன்பில் நிலைத்திருங்கள்” (யோவா 15:9) போன்ற சொற்றொடர்கள் இயேசு

நம் உள்ளங்களில் வசிக்கிறார் என்றும் இறையாட்சி பூமியில் வந்துள்ளது என்றும் தெளிவுப்படுத்துகின்றன. இந்த இறைவார்த்தை ஆண்டில் கிறிஸ்து இயேசுவை மறைநூலில் அதிகமாக அறிந்து அனுபவமாக்கி அவரோடு ஆழ்நிலை உறவுக்கு கடந்துவர முயற்சிப்போம்.

### 3. கடவுளின் வாக்கு என்பது அவரது பெயர் (திவெ 19:13)

தொடக்க திருச்சபை மக்கள் துன்புறுத்தப்பட்ட காலத்தில் நம்பிக்கையும் ஊக்கவும் ஆறுதலும் ஊட்டுகின்ற காட்சி ஒன்றை திருத்தூதர் யோவான் பத்மூ தீவில் வைத்து கண்டார். வெண்குதிரை மீது அமர்ந்து இரத்தம் தோய்ந்த ஆடையை அணிந்து படை தலைவன் விரைந்து வருகின்றார் “கடவுளின் வாக்கு என்பது அவரது பெயர், அரசருக்கெல்லாம் அரசர் ஆண்டவர்கெல்லாம் ஆண்டவர்” (திவெ 19:16). “தொடக்கத்தில் இருந்த வாக்கு கடவுளாயும் இருந்தது” என்ற எண்ணம் திருவெளிப்பாடு நூலின் இறுதிவரை காணக்கிடக்கிறது. இறைவார்த்தையை மாட்சிப்படுத்தும் போது மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்ட கிறிஸ்துவை மாட்சிப்படுத்துகிறோம் (யோவா 1;14). வாக்கு இதயத்தில் பாதுகாக்கப்படும் போது நம்பிக்கையின் மூலம் கிறிஸ்து நம் உள்ளங்களில் குடி கொள்கிறார் (எபே 3;17). “கிறிஸ்துவை பற்றிய நற்செய்தி நம்மில் குடிகொள்ளும் போது கிறிஸ்து நம் உள்ளில் இருக்கிறார்” (உரோ 8:10).

### 4. கட்டளைகளுக்கிடையே உள்ள வேறுபாடு

கடவுள் கட்டளைகளை கல்லில் வடித்து மோசேக்கு வழங்கினார். ஆனால் புதிய உடன்படிக்கையில் கடவுள் தமது தூய ஆவியாம் விரலால் இதயத்தில் தசையாம் சுவரில் வரைந்து வைத்துள்ளார். இங்கே கடவுள் கட்டளைகளை மட்டும் தரவில்லை மாறாக அவற்றை கடைபிடிப்பதற்கான ஆற்றலை தூய ஆவி வழியாக தந்துள்ளார்.



### 5. இறைவார்த்தை சூழல் குடும்பத்தில்

“இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். உன் வீட்டில் இருக்கும்போதும், உன் வழிப்பயணத்தின் போதும், நீ படுக்கும்போதும், எழும்போதும் அவற்றைப் பற்றிப் பேசு. உன் கையில் அடையாளமாக அவற்றைக் கட்டிக்கொள், உன் கண்களுக்கிடையே அடையாளப்பட்டமாக அவை இருக்கட்டும். உன் வீட்டின் கதவு நிலைகளிலும் நுழை வாயில்களிலும் அவற்றை எழுது” (இணை 6:6-9). சுருங்க கூறின் நாம் காண்பதும் கேட்பதும் பேசுவதும் இறைவார்த்தையாக இருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு விவிலிய நிகழ்வுகளை முதலில் கற்பிக்க வேண்டும். மீட்பு வரலாற்றின் பொருளை நம் முன்னோர்கள் நமக்கு எடுத்து சொல்லி உள்ளனர். ‘‘நாங்கள் கேட்டவை, நாங்கள் அறிந்தவை, எம் மூதாதையர் எமக்கு விரித்துரைத்தவை-இவற்றை உரைப்போம். அவர்களின் பிள்ளைகளுக்கு நாங்கள் அவற்றை மறைக்க மாட்டோம்; வரவிருக்கும் தலைமுறைக்கு ஆண்டவரின் புகழ்மிகு, வலிமைமிகு செயல்களையும் அவர் ஆற்றிய வியத்தகு செயல்களையும் எடுத்துரைப்போம்” (திபா 78:3-4).

### 6. திருவழிபாட்டில் இறைவார்த்தை

நமது வேளை மன்றாட்டுகளில் திருப்பாடல்கள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. அவை தூய ஆவியின் தூண்டுதலால் உருவாக்கப்படவை. எனவே, கடவுள் அதனை செவி சாய்த்து கேட்கிறார். புகழ் பாடல்கள் புனிதர்களான திருச்சபை தந்தையர்களால் எழுதப்பட்டவை. புறுமியோன், செதறா, எத்றோ போன்ற மன்றாட்டுக்கள் மீட்பு வரலாற்று நிகழ்வுகளும் உவமைகளும் உருவகங்களும் நிறைந்து காணப்படுகின்றன. திருப்பலியில் வரும் மன்றாட்டுக்கள், பலிபொருட்கள், செய்கைகள், ஆசீர்கள் இவை

யாவும் விவிலியத்திலிருந்து கடனெடுக்கப்பட்டவை. எனவே, திருவிவிலியத்தை புரிந்து கொள்ள திருவழிபாட்டில் செயல்பாட்டு பங்கேற்பு அவசியம்.

**7. இறைவார்த்தை விளக்கமும் திருச்சபை மரபும்**

பிரிவினை சபைகளில் ஒவ்வொருவரும் தங்களுடைய விருப்பத்தின்படி திருவிவிலியத்தை விளக்குகின்றனர். ஆனால், கத்தோலிக்க திருச்சபையில் ஆசிரியம் உள்ளது. திருவழிபாடு திருச்சபை தந்தையர்களின் படிப்பினை, திருமரபு ஆகியவற்றின் ஒளியில் இறைவார்த்தை விளக்கப்பட வேண்டும்.

**8. இறைவார்த்தையை கற்றல், அனுபவமாக்குதல், சுவைத்தல்**

மலங்கரை கத்தோலிக்க திருச்சபை ஒரு ஆண்டு முழுவதும் இறைவார்த்தையில் மூழ்கும் போது இறைவார்த்தை நம் ஒவ்வொருவருடனும் பேசும். கடவுளுடன் எடுத்து சொல்ல நம்மிடமும் சில காரியங்கள் உள்ளன. இறைவார்த்தை என்பது உயிரோட்டமற்ற ஒரு எண்ணம் அல்ல மாறாக வாழும் ஒரு நபர். நாம் அன்பு செய்கின்ற ஒருவரை நெருங்கி இருப்பது ஆனந்தம் தருவது அல்லவா. இறைவார்த்தை கற்றல் நம்மை கிறிஸ்து அனுபவத்திற்கும் அனுபவம் ஆனந்தத்திற்கும் இட்டு செல்கிறது.

**9. இறைவார்த்தையின் ஆற்றலில் நம்பிக்கை கொள்வோம்**

எசாயா இறைவாக்கினரின் கூற்று இங்கே முக்கியத்துவம் பெறுகிறது. "மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன; அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை" (எசா 55:10-11).



**10. பயிற்சிகளுடன் பயணிப்போம்.**

இறைவார்த்தை ஆண்டில் வழங்கப்படும் கையேடு செயல்திட்டம் இவற்றை கற்றறிந்து கொள்ளுங்கள் மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரிஜின் காலம் முதல் இன்றுவரை நடைமுறையில் உள்ள ஜெப முறையே *Lectio Divina* அல்லது திருவிவிலியத்தின் தியான வாசிப்பு. இறைவார்த்தையை வாசிப்பது, சிந்திப்பது, ஜெபிப்பது, தியானம் செய்வது, வாழ்வாக்குவது, சான்று பகிர்வது போன்ற படிநிலைகளில் பரிச்சயமானவர்கள் நம்மை வழிநடத்துவார்கள். மறைவட்ட அளவிலான பயிற்சிகளில் இயன்றவரை அனைவரும் பங்கெடுக்க வேண்டும். மேலும், இடைவிடாத இறைவார்த்தை வாசிப்பு, விவிலியம் சார்ந்த நேரலை வகுப்புகள், விவிலிய வினாடி வினா போன்றவை ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக திருத்தூதர் யாக்கோபு திருமுகத்திலிருந்து ஒரு செய்தியை உள்வாங்கி கொள்வோம். "இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்" (யாக் 1:22).

மறுவொன்றிப்பின் நூற்றாண்டிற்கான இறைவார்த்தை ஆண்டு திருச்சபையின் புனிதபடுத்துதலுக்கும் புதிதாக்குதலுக்கும் காரணமாகட்டும்.

† மேதகு **ஆபிரகாம் மார் யூலியோஸ்**
தலைவர் - இறைவார்த்தை ஆண்டு

18-09-2024
காதோலிக்கேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்.

# 94-ஆம் மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமமும்

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் 94-வது மறுஒன்றிப்பு ஆண்டுவிழா மற்றும் சபை சங்கமம் செப்டம்பர் மாதம் 20, 21 தேதிகளில் பாறசாலை மறைமாவட்டம், வெங்கானூர், மலங்கரை VPSHS பள்ளிக்கூட வளாகத்தில் (மார் இவானியோஸ் நகர்) வைத்து கொண்டாடப்பட்டது. செப்டம்பர் மாதம் 20-ம் தேதி, வெள்ளிக்கிழமை, மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நற்செய்தி பெருவிழாவும், நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. 21-ம் தேதி காலை 7.45 மணிக்கு கொடி உயர்த்துதலும், 8.00 மணி முதல் 10.00 மணி வரை கூடுகைகளும் தொடர்ந்து 10.30-க்கு மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் உயர் பேராயர் காதோலிக்கோஸ் மோறன் மோர் பசேலியோஸ் கர்தினால் கினீமிஸ் பாவா அவர்களின் தலைமையில் ஏனைய ஆயர்களோடு இணைந்து கூட்டுத் திருப்பலியும், இறுதியில் மறுவொன்றிப்பு ஆண்டு விழாவிற்கான சிறப்புச்செய்தி வழங்கலும் நடைபெற்றது. இம்மறுவொன்றிப்பு ஆண்டு விழா கொண்டாட்டங்களில் அனைத்து பணித்தளங்களிலிருந்தும், மறைமாவட்டங்களிலிருந்தும், துறவோர் இல்லங்களிலிருந்தும் ஏராளமான இறைமக்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள், ரம்பான்மார்கள், அருட்தந்தையர்கள், திருத்தொண்டர்கள், துறவறத்தார்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# பேராலய தலைமை வாயில் நிலை அர்ச்சித்து நிறுவுதல் திருச்சடங்கு

கிறிஸ்து அரசர் பேராலய தலைமை வாயில் நிலை அர்ச்சித்து நிறுவுதல் திருச்சடங்கு 22.9.2024 காலை 7.30 மணிக்கு திருப்பலியைத் தொடர்ந்து 9.30 மணியளவில் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் புத்தூர் மறைமாவட்ட ஆயர் மேதகு கீவற்கீஸ் மார் மக்காறியோஸ் அவர்களின் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இத்திருநிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், பேராலய பங்குமக்கள், மறைமாவட்ட மேய்ப்புபணி அறிவுரைக்குழு உறுப்பினர்கள், ஊர்மக்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தார்கள். திருச்சடங்குகளுக்கான ஒழுங்குகளை மறைமாவட்ட முதன்மைக்குரு மற்றும் பேராலய கட்டுமான பணிக்குழு செயலர் & பொருளர் மற்றும் பொறுப்பாளர்கள் ஒழுங்குபடுத்தினார்கள்.

# விவிலிய பணிக்குழு

**இறைவார்த்தை ஆண்டிற்கான பயிற்சி மலங்கரை சபையளவில் நடைபெற்ற பயிற்சிகள்**

அருள் தந்தையர்களுக்கான பயிற்சி ஜூலை 30,31 ஆகஸ்ட் 01 ஆகிய நாட்களில் நடைபெற்றது. அருள் சகோதரிகளுக்கான பயிற்சி ஆகஸ்ட் 3, 4 ஆகிய நாட்களில் நடைபெற்றது. விசுவாசிகளுக்கான பயிற்சி ஆகஸ்ட் 19,20 ஆகிய நாட்களில் நடைபெற்றது

***மார்த்தாண்டம் மறைமாவட்ட அளவில் நடைபெற்ற பயிற்சிகள்.***

1) மலங்கரை சபை ஒட்டு மொத்த அளவில் பயிற்சி பெற்ற அருள் தந்தையர்கள், அருள் சகோதரிகள், விசுவாசிகள் இணைந்து செப்டம்பர் 14 ஆம் நாள் முழு நேர பயிற்சி பெற்றனர்.

2) மறை மாவட்டத்தில் உள்ள அனைத்து அருள் தந்தையர்களுக்கும் அருள் சகோதரிகளுக்கும் மேதகு ஆயர் சில்வானோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் பயிற்சி வழங்கப்பட்டது.

***ஆலோசனைக் கூட்டங்கள்***

முதன்மை குரு தலைமையில் முதல் ஆலோசனைக் கூட்டம் ஆகஸ்ட் 29 அன்று நடைபெற்றது. எல்லாம் மறைவட்ட முதன்மை குருக்களும் அடங்கிய ஆலோசனை கூட்டம் தனியாக நடைபெற்றது. மறை வட்டங்களில் உள்ள அருள் தந்தையர்கள் தலைமையில் விவிலிய பணி குழுவின் கூட்டங்கள் நடைபெற்றன.

***இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா***

1. செப்டம்பர் மாதம் 29-ஆம் தேதி மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில் பாண்டிச்சேரி உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு பிரான்சிஸ் கலிஸ்ட் முன்னிலையில் தாபோர் தியான இல்லத்தில் வைத்து துவக்க விழா நடைபெற்றது.
2. பங்களவில் செப்டம்பர் மாதம் 29-ஆம் தேதி காலை, காலை ஜெபம் முடிந்ததும் விவிலியம் ஜெபமேசையில் நிறுவப்பட்டு விவிலிய ஆண்டு துவங்கப்பட்டது.

# நற்செய்தி சங்கம்

கொல்லங்கோடு மற்றும் களியக்காவிளை மறைவட்ட நற்செய்தி சங்க வகுப்பானது அருட்தந்தை பெனடிக்ட் OIC மற்றும் அருட்சகோதரி மேரி பிரசாத் அவர்களின் தலைமையில் இந்த மாதம் 14 மற்றும் 15 ஆகிய தினங்களில் நடைபெற்றது.



# குருமடச் செய்திகள்

❖ புனித அன்னை மரியாவின் பிறப்பு திருநாளை முன்னிட்டு இளங்குருமடத்தில் செப்டம்பர் மாதம் 8 -ஆம் தேதி அன்று ஜெபமாலை பவனியானது மார் எஃப்ரேம் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி இளம் குருமடம் வரை நடைபெற்றது. இதில் அருட்தந்தை ஆல்பர்ட் கலிஸ்டஸ் அவர்கள் கலந்துகொண்டு அன்றைய நாளின் சிந்தனையை வழங்கினார். இந்நிகழ்வில் புனித அல்போன்சா மறைபரப்புதள மக்களும் மிக ஆர்வமுடன் பங்கேற்றனர்.

❖ ஓணம் பண்டிகையானது செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி இளம் குருமாடத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. அருட்சகோதரர்கள் அனைவரும் இணைந்து அத்தப்பூ கோலம் போட்டு ஓண பண்டிகை சிறப்பித்தனர். ஓணம் பண்டிகை முன்னிட்டு அருட் சகோதர்கள் 11-ஆம் தேதி விடுமுறைக்காக தங்கள் இல்லங்களுக்கு சென்றார்கள். பின்னர் மகிழ்ச்சியுடன் 18-ஆம் தேதி விடுமுறை முடிந்து இளம் குருமடத்திற்கு திரும்பி வந்தார்கள்.

❖ மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் 94-வது மறுஒன்றிப்பு ஆண்டுவிழா மற்றும் சபை சங்கமத்தை முன்னிட்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி பாறசாலை மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்ற சங்கம நிகழ்வில் இளம் குருமட அருட்சகோதரர்கள் அனைவரும் பக்தியுடன் திருப்பலியில் பங்கேற்றனர்.

❖ செப்டம்பர் மாதம் 23-ஆம் தேதி அன்று நமது மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் இளம் குருமடத்திற்கு வருகை தந்து அருட்சகோதர்களை சந்தித்தார். மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் அருட்சகோதரர்களுக்கு சிறிய ஒரு வகுப்பானது எடுக்கப்பட்டது. வகுப்பில் ஆயர் அவர்கள் மறுஒன்றிப்பு பற்றிய விளக்கங்களையும் விவிலிய ஆண்டினை குறித்தான மிக ஆழமான கருத்துக்களையும் அருட் சகோதரர்களோடு பகிர்ந்து கொண்டார். பின்னர் மாலை ஜெபத்திலும் பங்கேற்று சென்றார்.

# *இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா*

செப்டம்பர் மாதம் 29-ஆம் தேதி மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில் பாண்டிச்சேரி உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு பிரான்சிஸ் கலிஸ்ட் முன்னிலையில் தாபோர் தியான இல்லத்தில் வைத்து துவக்க விழா நடைபெற்றது. துவக்க விழாவினை சிறப்பிக்கும் விதமாக MCCL பிள்ளைகள் விவிலிய மாந்தர்களைப் போல் வேடமிட்டு அணிவகுத்து நின்றனர். இந்நிகழ்விற்கு மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளிருந்தும் ஏராளமான இறைமக்கள், குறிப்பாக, பங்கு பேரவை உறுப்பினர்கள், மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரை குழுவின் உறுப்பினர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் , அருட்சகோதரர்கள் என அனைவரும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர்.

## New Offices of Priests 2024
## Marthandam Diocese

| Name | Office |
|---|---|
| Rev. Fr. Justin Nellikavilai | Bursar<br>Malankara Catholic College, Marigiri |

## Change of Addresses

**Rev. Fr. Jose G**
St. Jude's Malankara Catholic Church
Adichavilagam, S.T. Mankadu P.O.
K.K. District – 629 172



# மேரி மக்கள் துறவற சபை

இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு மலங்கரை கத்தோலிக்க சபை அளவில் ஆகஸ்ட் மாதம் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பயிற்சியில் மேரி மக்கள் கன்னியர் சமூகம், மார்த்தாண்டம் மாகாணத்தை சார்ந்த ஏழு அருட்சகோதரிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். அதனைத் தொடர்ந்து, செப்டம்பர் மாதம் 14-ம் தேதி மேதகு ஆயர் சில்வானோஸ் தலைமையில் நடைபெற்ற மறைமாவட்ட அளவிலான இறை வார்த்தை பயிற்சியிலும் பங்கெடுத்தனர். இப்பயிற்சியில் அருட்சகோதரிகள் இரு குழுக்களாக பிரிந்து மிக ஆர்வத்தோடு பயிற்சி மேற்கொண்டனர். பயிற்சியில் பங்கெத்த அருட்சகோதரிகள்:

மார்த்தாண்டம் மறைவட்டம் - அருட்சகோதரி ஜோ மேரி
குலசேகரம் மறைவட்டம் - அருட்சகோதரி நித்யா
பனச்சமூடு மறைவட்டம் - அருட்சகோதரி நீற்றா கிரேஸ்
கொல்லங்கோடு மறைவட்டம் - அருட்சகோதரி ஸ்டெல்லா ராணி
அழகியமண்டபம் மறைவட்டம் - அருட்சகோதரி அருள் மரியா
நாகர்கோவில் மறைவட்டம் - அருட்சகோதரி ஸ்டெபின்
மிஷன் மறைவட்டம் - அருட்சகோதரி மேரி அகஸ்டின்

## Bishop's Feast Day Charity Fund
### Diocese of Marthandam
### 2023 - 2024

Parish

| Parish | Amount |
|---|---|
| Kulasekharam | 2,000.00 |

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### இலவச கண் பரிசோதனை முகாம்

மிட்ஸ் நிறுவனம் மற்றும் டாகடர் சுரேஷ் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் நடைக்காவு ஆலய சமூகநல கூடத்தில் வைத்து 11.09.2024 அன்று காலை 10 மணி முதல் மதியம் 01 மணி வரை நடத்தப்பட்டது. இந்த முகாமினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்தார்கள். இந்த முகாமில் கலந்துகொண்டவர்களின் கண்கள் பரிசோதனை செய்யப்பட்டு தேவைப்பட்டவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் கண் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. மேலும் அதிக பரிசோதனைகள் தேவைப்பட்டவர்களுக்கு மருத்துவமனைக்கு செல்லவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த பரிசோதனை முகாமில் மொத்தம் 94 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### உதவித்திட்டங்கள்

1. 18.09.2024 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக களியக்காவிளை பணிமண்டலத்தின் 20 சுய உதவி குழுக்களில் உள்ள 81 பயனாளிகளுக்கு ரூபாய் 40 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது.

2. 10.09.2024 அன்று மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 37 நோயாளிகளுக்கு மருத்துவ செலவிற்காக ரூபாய் 2,05,000/- உதவித் தொகை மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

### பிறநிகழ்வுகள்

1. 22.09.2024 அன்று மிட்ஸ் மற்றும் Sri Ram Foundation இணைந்து நடத்திய இலவச புற்றுநோய் பரிசோதனைமுகாம்



கீழ்மாங்கோட்டில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் மொத்தம் 35 நபர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

2. 23.08.2024 அன்று நாஞ்சில் கத்தோலிக்க கலைகல்லூரியில் சமூகப்பணி கல்வி பயிலும் 13 மாணவ மாணவிகள் பயிற்சிக்காக மிட்ஸ் நிறுவனத்தின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு மிட்ஸ் திட்டஅலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்கள்.

3. 25.08.2024 அன்று மிட்ஸ் அலுவலகம், ஆற்றூர் மற்றும் மரியகிரி ஆகிய பகுதிகளில் வைத்து மிட்ஸ் அறிவு திறன் தேர்வு நடத்தப்பட்டது. இந்த தேர்வினை தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகள் 129 பேர் எழுதினர்.

4. 26.08.2024 அன்று விண்ணைத் தொடு திட்டத்தில் உள்ள 7 முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு திரு. அரசு அவர்களால் ஆற்றூரில் வைத்து Group Conselling நடத்தப்பட்டது. இந்தநிகழ்வில் மொத்தம் 52 மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

5. 29.08.2024 அன்று உண்ணாமலைகடை ஆலய சமூக நல கூடத்தில் வைத்து உணவே மருந்து என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. டாகடர். வீர பத்ரன், திரு. ஷா மற்றும் திரு. பென்னட் ஆகியோர் இயற்கை உணவின் முக்கியத்துவம் அவற்றை உண்பதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் துரித உணவுகளின் தீமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தினார்கள். இந்த கருத்தரங்கில் மொத்தம் 71 பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

6. 14.09.2024 அன்று தளிர்கள் உலக பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து

நடத்தப்பட்டது. இந்த வகுப்புகளில் கலந்துகொண்ட தாய்மார்களுக்கு திருமதி ஜினி ஜெப மலர் அவர்களால் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குதல் குறித்த பயிற்சி வழங்கினார்கள். இந்த வகுப்புகளில் 87 மாணவர்களும் 45 தாய்மார்களும் கலந்துகொண்டனர்.

7. 17.09.2024 அன்று கோல்பிங் கூட்டமைப்பு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் கோல்பிங் தினம் கொண்டாடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் மொத்தம் 14 கூட்டமைப்பு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

8. 22.09.2024 அன்று மிட்ஸ் மற்றும் Sri Ram Foundation இணைந்து நடத்திய இலவச புற்றுநோய் பரிசோதனை முகாம் கொட்டாரத்தில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் மொத்தம் 30 நபர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

9. 19.09.2024 அன்று இயற்கை விவசாயத்தை மேம்படுத்தும் விதமாக புன்னமூட்டுக்கடையில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் 50 நபர்களுக்கு காய்கறி விதைகள் வழங்கினார்கள்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**அக்டோபர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 18, 19 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



## மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம் (MCCL)

மலங்கரை கத்தோலிக்க திருஅவையின் மறு ஒன்றிப்பு நூற்றாண்டு விழாவை கொண்டாட முன்தயாரிப்பாக 2024 செப்டம்பர் 20 முதல் 2025 செப்டம்பர் 19 வரை உள்ள ஒரு வருடம் இறைவார்த்தை ஆண்டாக நாம் கடைபிடிக்கின்றோம். நமது மறைமாவட்டத்தில் இறைவார்த்தை ஆண்டு துவக்க விழாவானது 2024 செப்டம்பர் 29-ம் தேதி, மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் குழித்துறை, மார் எஃப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இந்த துவக்கவிழா நிகழ்வில் MCCL சார்பாக பிள்ளைகள் விவிலிய மாந்தர்களாக வேடமிட்டு அணிவகுத்து வருகின்ற நிகழ்வு நடைபெற்றது. ஒவ்வொரு பங்குகளிலிருந்தும் MCCL பிள்ளைகள் இந்த நிகழ்வில் சிறப்பாக பங்கேற்றனர். இறுதியில் பங்கேற்ற அனைத்து பிள்ளைகளுக்கும் விவிலிய பணிக்குழு சார்பாக நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு 2024 செப்டம்பர் 29 முதல் ஒவ்வொரு நாளும் MCCL பிள்ளைகள் ஒரு இறைவார்த்தை கூறி அதை நமது மறைமாவட்ட Youtube Chanel-ல் (TMCM) பதிவேற்றம் செய்கின்ற நிகழ்வு நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு பங்குகளில் இருந்தும் MCCL பிள்ளைகள் ஆர்வமாக இந்த இறைவார்த்தை கூறும் நிகழ்வில் பங்கேற்கின்றனர்.

# HEALTH FOR ONE MILLION (HOM)
Diocese of Marthandam

6.8.2024 அன்று TNBCHCC சார்பாக பூண்டியில் நடைபெற்ற TOT பயிற்ச்சி முகாமில் அருட்தந்தை அஜீஸ்குமார் மற்றும் MMM உறுப்பினர்கள் திரு. ஜாண், திரு. பால்ராஜ், திரு. வர்கீஸ், திரு. அருள்தாஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

20.8.20224 அன்று பேதுருவின் கரங்கள் திட்டத்தின் கீழ் படுக்கை நோயாளிகளுக்கு மாதாந்திர மருத்துவ நிதி உதவி வழங்கப்பட்டது. HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் இந் நிதிஉதவியை வழங்கினார்கள்.

23.8.2023 அன்று உலக நுரையீரல் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு பள்ளியாடி மாமூட்டுக்கடை வெள்ளியாவிளை பகுதிகளைச் சார்ந்த படுக்கை நோயாளிகள் மற்றும் பேதுருவின் கரங்கள் பயனாளிகளின் இல்லங்களை Palliative Care பணியாளர்கள் அருட்சகோதரி ஐஸ்வரியா திருமதி ஷீபா, திருமதி ஆஷா மற்றும் HOM பணியாளர் லிஸ்பின் ஆகியார் சந்தித்து ஜெபம் மற்றும் மருத்துவ பணிகளை செய்தார்கள்.

21.8.2024 அன்று உண்ணாமலைக்கடை பங்கில் வைத்து நடைபெற்ற மார்த்தாண்டம் Zone சுயஉதவிக்குழு பொருளர் கூட்டத்தில் MMM சார்பாக திரு. லிஸ்பின் அவர்கள் பங்கேற்று நலவாழ்வு குறித்த கையேடு வழங்கி உடல் நலஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வுரையாற்றினார்கள். இந்நிகழ்வில் HOM சுயஉதவிக் குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் திருமதி செல்வி மற்றும் அமைப்பாளர் திருமதி லதா ஆகியோர் கலந்துகொண்டனர்.



# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரியில் ஆசிரியர் தினம், 05.09.2004 அன்று மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று காலை அனைத்து ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லா பணியாளர்கள் கவுரவிக்கப்பட்டனர். மாலை 3.30 மணியாவில் இறைவணக்கப் பாடலுடன் ஆசிரியர் தின விழாவானது தாளாளர் பேரருட்தந்தை சதீஷ் குமார் தலைமையில் இனிதே ஆரம்பமானது. தந்தை அவர்கள், "ஆண்டுகள் பல கடந்தாலும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் மீதான அன்பும், உரிமையும் குறைவதில்லை என்பதை மையக்கருத்தாக வைத்து வாழ்த்திப்பேசினார். மேலும் கல்லூரியின் நிதிக்காப்பாளர் அருட்தந்தை கெபின் அவர்கள் வாழ்த்துரையில், ஆசிரியர்கள் சிங்கத்தைப்போல துணிவுடனும், உறுதியுடனும், ஆற்றலுடனும் செயல்படுபவர்கள் என்றார். அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. ஆசிரியர்களின் சிறப்பு குறித்து இரு மாணவர்கள் தங்களது கருத்துக்களை பரிமாறினர். இறுதியாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

**ஓணம் விழா ஊர்வலம்**

இலவுவிளை மார் எப்ரேம் என்ஜினீயரிங் கல்லூரியில் ஓணம் விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவை முன்னிட்டு மாணவ மாணவிகள் கலந்து கொண்ட ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலமானது இலவுவிளை சந்திப்பில் இருந்து தொடங்கி கல்லூரியில் நிறைவடைந்தது. நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் அருட்தந்தை சதீஷ்குமார் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் லெனின் பிரட், நிதி காப்பாளர் அருட்தந்தை கெபின், தாரகை கத்பர்ட் எம்.எல்.ஏ. உள்பட பலர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் மாணவர்கள் மாவேலி மன்னர் வேடங்கள் அணிந்தும், மாணவமாணவிகள் கேரள கலாச்சார உடைகள் அணிந்து கலந்து கொண்டனர். செண்டை மேளத்துடன் கதகளி உள்ளிட்ட நடனங்களும் இடம்பெற்றிருந்தன. ஊர்வலம் கல்லூரியை சென்றடைந்ததும் அங்கு வளாகத்தில் அத்தப்பூ கோலப்போட்டி மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

# மறைவட்ட செய்திகள்

## பனச்சமூடு மறைவட்டம்

செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் பாலர் சபை பிள்ளைகளுக்கான கருத்தரங்கம் பனச்சமூடு பங்கில் வைத்து நடைபெற்றது

## நாகர்கோவில் மறைவட்டம்

நாகர்கோவில் மறைவட்ட மாதாந்திர கூடுகை 23/09/2024 அன்று குருக்கள் மாதாந்திர தியானத்தோடு சேர்த்து கன்னியாகுமரி மலங்கரை பவன் வளாகத்தில் வைத்து காலை சுமார் 11.00 மணியளவில் மறைவட்ட முதன்மை குரு தலைமையில் நடைபெற்றது. 'குருத்துவ வாழ்வில் இறைவனின் இடைவிடா கரம்' என்ற மைய சிந்தனையில் அருட்தந்தை ராபர்ட் அவர்கள் தியான சிந்தனைகளை வழங்கினார்கள். தொடர்ந்து மறைவட்ட வளர்ச்சிக்கான திட்டங்களை குறித்து, அந்தந்த பணி குழுக்களின் இயக்குனர்கள் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்து பல தீர்மானங்களை எடுத்தார்கள். குறிப்பாக இறைவார்த்தை ஆண்டின் நிகழ்வுகள் எவ்வாறாக அமைய வேண்டும் என்பதை குறித்த பலவிதமான கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன.

## களியக்காவிளை மறைவட்டம்

களியக்காவிளை மறைவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானம் 09.09.2024 அன்று மரியகிரியில் வைத்து நடைபெற்றது. தியானத்தை மறைவட்ட முதன்மை குரு அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் வழிநடத்தினார்கள். இத் தியானத்திலே மறைவட்டத்தி லுள்ள அனைத்து குருக்களும் பங்கேற்றார்கள். இத்தியானதிலே மறைவட்டத்திற்கு புதிதாக வருகை தந்துள்ள அருட்தந்தை ஜோஸ் G. அவர்களுக்கு வரவேற்பும், அதுபோன்று மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்லுகின்ற அருட்தந்தை வினு இம்மானுவேல் அவர்களுக்கு பிரியாவிடை கூடுகையும் நடைபெற்றது. இறுதியிலே



மறைவட்ட முதன்மை குரு தந்தையினுடைய இறுதிஜெபத்துடன் தியானம் நல்லமுறையில் நிறைவேறியது.

மறைவட்ட இளையோர்களுக்கான எழுத்துப்போட்டி மற்றும் வினாடிவினா போட்டி 01.09.2024 அன்று மரியகிரி பள்ளிக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. எல்லா பங்குகளிலிருந்தும் இளையோர்கள் ஆர்வமாக இப்போட்டியிலே பங்கேற்றார்கள். வினாடிவினா சுற்றில் முதலிடத்தை மீனச்சல் பங்கும் இரண்டாமிடத்தை சூரியகோடு பங்கும் மூன்றாமிடத்தை மரியகிரி பங்கும் பெற்றுச்சென்றார்கள். இதில் முதல் இருஇடங்களையும் பெற்ற அணிகள் மறைமாவட்டத்தில் நடைபெறுகின்ற வினாடி வினா போட்டிகளிலே செல்ல வேண்டுமென்று மறைவட்ட இயக்குனர் தந்தை அவர்கள் வலியுறுத்தி இருந்தார்கள்.

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை யூஜின்
அக்டோபர் 04



அருட்தந்தை சஜித் பிரான்சிஸ்
அக்டோபர் 04



அருட்தந்தை
அஜீஷ் ஜோகன்
அக்டோபர் 22



அருட்தந்தை
வில்பிறைட்
அக்டோபர் 22



அருட்தந்தை
கிறிஸ்பின் குரு
அக்டோபர் 25

# ஆயரின் செப்டம்பர் மாத நிகழ்வுகள்



4 ➢ கோணம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

7 ➢ முகவூர் ஆலயத்தில் புனரமைக்கப்பட்ட பலிபீடத்தை அர்ச்சித்து நன்றி திருப்பலி நிறைவேற்றினார்.

8 ➢ திருவனந்தபுரம் மஞ்ஞுக்கால ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

8 ➢ சுருளகோடு திருத்தலத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

9 ➢ நாகர்கோவிலில் வைத்து நடைபெற்ற குமரிமாவட்ட கிறிஸ்தவ ஐக்கிய பேரவை செயற்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

13 ➢ பெருவிளை திருத்தலத்தில் ஆசியுரை வழங்கினார்.



14 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் இறைவார்த்தை ஆண்டு ஊக்குனர்களின் பயிற்சியில் துவக்கவுரை ஆற்றி துவங்கி வைத்தார்.

16 ➢ திருவனந்தபுரம் நாலாஞ்சிறை புதுஆலய அர்ச்சிப்பில் கலந்து கொண்டார்.

18 ➢ திருவல்லாவில் வைத்து நடைபெற்ற பெதனி துறவற சகோதரிகளின் நூற்றாண்டு விழா துவக்க நிகழ்வு திருப்பலியில் கலந்து கொண்டார்.

19 ➢ பாத்திமாநகர் ஆலயத்தில் திருமுழுக்கு திருச்சடங்கை தலைமையேற்று நடத்தினார்.

20 ➢ பாறசாலை மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்ற 94-ம் மறுவொன்றிப்பு நிகழ்வின் துவக்கநாள் மாலை மன்றாட்டிலும் நற்செய்தி பகிர்விலும் கலந்து கொண்டார்.

21 ➢ 94-ம் மறுவொன்றிப்பு மற்றும் சபை சங்கம நன்றி திருப்பலியில் கலந்து கொண்டார்.

22 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி புது ஆலயத்தின் தலைவாசலை அர்ச்சித்து நிறுவினார்.

22 ➢ Shalom Home -ல் முதியோரை சந்தித்து உரையாடினார்.

23 ➢ புனித எப்ரேம் இளங்குருமடத்தில் மாலைமன்றாட்டை தலைமையேற்று நடத்தி அருட்சகோதரர்களை சந்தித்தார்.

25 ➢ பத்தனம்திட்டையில் வைத்து நடைபெற்ற அருட்தந்தை ஸ்கரிய அவர்களின் நினைவு திருப்பலியில் கலந்து கொண்டார்.

27 ➢ Shalom முதியோர் இல்லத்தை சந்தித்து அவர்களோடு உணவருந்தி மகிழ்ந்தார்.

27 ➢ ஞானதாசபுரம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கினார்.

28 ➢ திருவனந்தபுரம் புதுக்குறிச்சி இலத்தீன் ஆலயத்தில் மாலை மன்றாட்டை நடத்தி நற்செய்தி உரையை வழங்கினார்.

29 ➢ சூரியகோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புது நன்மை வழங்கினார்.

29 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட இறைவார்த்தை ஆண்டு துவக்க விழாவில் கலந்துகொண்டு தலைமை உரை ஆற்றி துவங்கி வைத்தார்.

29 ➢ ஐக்கியக் கிறிஸ்மஸ் விழா அறக்கட்டளை ஆண்டுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.





## இம்மாதம் நினைவு கூர

அக்டோபர் 2024


1

1 - புனித குழந்தை தெரசாள்

2 - காவல் தூதர்கள்

3 - அரியோபாக்கஸ் மார் திவன்னாசியோஸ்


4

4 - புனித பிரான்சிஸ் அசிசி, மார் துமாத்தியோஸ்

5 - புனித பௌஸ்தினா

6 - சிலுவைத் திருநாளுக்குப்பின் நான்காம் ஞாயிறு
மலங்கரை கத்தோலிக்க இளைஞர் தினம்


7

7 - ஜெபமாலைத் திருநாள்
மார் சர்க்கீசும் மார் பாக்கோசும்

9 - குலத்தந்தையான ஆபிரகாம்


10 - பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையின் நினைவு
இறைவாக்கினர் தானியேல்


10

11 - திருத்தொண்டர் மார் பிலிப்பு
திருத்தந்தை புனித 23-ாம் யோவான்


13 - சிலுவைத் திருநாளுக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
மார் கார்ப்போஸ்

15 - ஆவிலாவின் புனித தெரசா


18

18 - நற்செய்தியாளர் புனித லூக்கா

20 - சிலுவைத் திருநாளுக்குப்பின் ஆறாம் ஞாயிறு
இறைவாக்கினர் யோவேல்
மறைபரப்பு ஞாயிறு



23

22 - மார் ஹிலாரியோன்
புனித இரண்டாம் யோவான் பவுல் பாப்பரசர்

23 - அல்பேயுவின் மகன் மார் யாக்கோபு

27 - சிலுவைத் திருநாளுக்குப்பின் ஏழாம் ஞாயிறு

28 - பெத்தேரி மறைமாவட்டம் நிறுவப்பட்ட நாள்

## 94-ஆம் மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமம்





## இறைவார்த்தை ஆண்டு துவக்கவிழா




## பேராலய தலைமை வாயில் நிலை அர்ச்சித்து நிறுவுதல் திருச்சடங்கு



## Seminary



## நற்செய்தி சங்கம்



## விவிலிய பணிக்குழு



## MCCL



## MIDS



## HOM



## Mar Ephraem College

